**<u>மதுக்கரை நகராட்சியில் 18.05.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.</u>**

## மன்றப் பொருள் எண்.01

இந்நகர் மன்றத்தின் தீர்மானம் எண்: 28, நாள்.08.04.2022 ன் படி அரசாணை நிலை எண்: 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 30.03.2022 ன் படியும், அரசு செய்தி வெளியீடு எண்.519, நாள் : 01.04.2022 ன் படியும் மதுக்கரை நகராட்சி பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றும் பொருட்டு இந்நகராட்சியில் நிதி ஆதாரத்தினை உயர்வுபடுத்தும் வகையில் சொத்து வரி சீராய்வு பணியை நடைமுறைப்படுத்தி நகராட்சியின் நிதி ஆதாரத்தினை உறுதிபடுத்த 2022–2023ம் நிதியாண்டின் முதல் அரையாண்டான 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு (General Revision of Property Tax) மேற்கொள்ள மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் சுற்றறிக்கை கடிதம் ந.க எண். 40032/2021/ஆர்1, நாள்: 01.04.2022 ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றுவதுடன், சொத்து வரி/ காலிமனை வரி பொது சீராய்வு 2022 க்கான கால அட்டவணையை பின்பற்றவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு பொது மக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் 30 தினங்களுக்குள் தெரிவிக்க கோரி கடந்த 14.04.2022 ம் நாளில் தினகரன் நாளிதழில் சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்கண்ட விபரத்திற்கு நாளிதழில் வெளியிடப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயித்தல் தொடர்பான அட்டவணை விபரம் வருமாறு.

**<u>1.சொத்துவரி</u>**

| பரப்பளவு சதுரடி | உயர்வு செய்வதற்கான காரணி | குடியிருப்புகளுக்கான மண்டலம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ‘அ’ மண்டலம் (A) | | ‘ஆ’ மண்டலம் (B) | | ‘இ’ மண்டலம் (C) | |
| | | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்ட வாறு | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்ட வாறு | பழைய மண்டலம் மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்ட வாறு |
| குடியிருப்பு | | | | | | | |
| 600 சதுர அடிவரை | 1.25 (25%) | | 0.94 | | 0.75 | | 0.63 |
| 601 – 1200 | 1.50 (50%) | | 1.13 | | 0.90 | | 0.75 |
| 1201 – 1800 | 1.75 (75%) | | 1.31 | | 1.05 | | 0.88 |
| 1801க்கு மேல் | 2.00(100%) | 0.75 | 1.50 | 0.60 | 1.20 | 0.50 | 1.00 |
| | | | குடியிருப்பு அல்லாதவைக்கான | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் | | |
| கல்வி நிறுவனங்கள் | 1.75 (75%) | 1.31 | 1.05 | 0.88 |
| தொழிற்சாலை | 1.75 (75%) | 1.31 | 1.05 | 0.88 |
| வணிகம் | 2.00 (100%) | 1.50 | 1.20 | 1.00 |

2. சொத்துவரியானது ஆண்டு மதிப்பில் 10 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

3. காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம்
உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படும்.

4. மேற்கூறிய உயர்வின் அடிப்படையில் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து,
இனிவருங்காலங்களில் சொத்து வரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படும்.

5. திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின்படி, புதிய வார்டுகள் வாரியாக மண்டலங்கள்
கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம் | வார்டு மறுவரையறையின்படி தற்போது நிர்ணயம் செய்யப்படுப் தெருக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | A | 71 |
| 2 | B | 84 |
| 3 | C | 19 |

மேற்கண்ட அறிவிப்பின்படி 30 தினங்களுக்குள் வரப்பெற்ற ஆலேசாணைகள் மற்றும் ஆட்சேபணைகள் விபரம் வருமாறு

| வரிசை எண் | கடிதம் வரப்பெற்ற நாள் | கடிதம் அனுப்பியவர்களின் விபரம் |
|---|---|---|
| 1 | 04.05.2022 | திரு. M. பத்மநாபன்<br>செயலாளர்<br>இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட்)<br>எண்: 3/121, காந்தி நகர், பாலக்காடு மெயின் ரோடு, மதுக்கரை,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |

மேற்கண்ட விபரத்திற்கு திரு. ஆ. பத்மநாபன் உள்பட 11 பேர்களும் இந்த சொத்துவரி உயர்வை மறு பரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்கள். இந்நிலையில் தமிழக அரசின் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் வழி காட்டுதல்களை பின்பற்றி சொத்துவரி பொது சீராய்வை 01.042022 முதல் நடைமுறைப்படுத்துவது குறித்து மன்றத்தின் முடிவு வேண்டப்படுகிறது.

( ந.க. எண் 456/ 2022/ அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மதுக்கரை நகராட்சி 21.47 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இப்பகுதியில் சுமார் 36720 மக்கள் தொகை கொண்டதாகவும், தற்போது 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் கொண்ட நகர்மன்ற நிர்வாகமும் செல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் வாழும் பொது மக்களுக்கு அத்தியாவிஷயமாக தேவைப்படும் குடிநீர் விநியோக வசதிகள், தெரு விளக்குகள் வசதி மற்றும் பொது சுகாதார நலன் காத்தல் போன்ற அடிப்படை வசதிகளை உரிய காலத்திற்குள் செய்து கொடுப்பதற்கும் நகராட்சி பகுதிவாழ் மக்களுக்கு எதிர்வரும் அதிகப்படியான அனைத்துச் செலவினங்களையும் மேற்கொள்வதற்கும் இந்நகராட்சிக்கான நிதி ஆதாரத்தினை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழக அரசின் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இந்நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு பணியை நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.30</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

இடம் : மதுக்கரை<br>நாள் : 18.05.2022

நகர் மன்றத்தலைவர்<br>மதுக்கரை நகராட்சி

---